DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM.

<table>
<tr><td colspan="3">Case No</td><td>:</td><td colspan="3">O.S :87/2015</td></tr>
<tr><td colspan="3">Deposition of Witness</td><td>:</td><td colspan="3">பி.சா. 3</td></tr>
<tr><td>Name</td><td>:</td><td colspan="2">திரு.மகேந்திரன்</td><td rowspan="2">Occupation</td><td rowspan="2">:</td><td rowspan="2">விவசாயம்</td></tr>
<tr><td>Father's Name/ Husband</td><td>:</td><td colspan="2">நாகராஜன்</td></tr>
<tr><td>Village</td><td>:</td><td colspan="2">அலவந்திபுரம்</td><td rowspan="2">Age</td><td rowspan="2">:</td><td rowspan="2">57</td></tr>
<tr><td>Taluk</td><td>:</td><td colspan="2">பாபசாம்</td></tr>
</table>

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act,1969 (Act 44 of 1969). 25-08-2025

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 4 ஆம் பிரதிவாதி . என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்திருக்கிறேன். அதை படித்து பார்த்து கையெழுத்து செய்திருக்கிறேன். தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

**10, 11, 12, 18, 19, 20 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என் தாத்தா பெயர் நடேச படையாச்சி. நடேச படையாச்சியின் அப்பா பெயர் சீனன் படையாச்சி . இந்த சொத்துக்கள் சீனன் படையாச்சியின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் தெரியாது . சீனன் படையாச்சிக்கு , 3 மகன்கள். நடேச படையாச்சி, பக்கிரிசாமி படையாச்சி , ராமசாமி படையாச்சி. சீனன் படையாச்சி சொத்துக்களை வா.சா.ஆ. 27 இன் மூலம் நடேச படையாச்சி, பக்கிரிசாமி படையாச்சி , ராமசாமி படையாச்சி பாகப்பத்திரம் மூலம் 11.12.1950 இல் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரி.

அப்போதுள்ள இந்து வாரிசு உரிமை சட்டப்படி அவரவருக்கு கிடைத்த சொத்துக்கள் அவர்களுக்கு தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் சரி . அவ்வாறு நடேச படையாச்சிக்கு தனியாக சொத்துக்கள் கிடைத்தது என்றால் சரி. அதில், வேறுயாருக்கும் உரிமை கிடையாது. அதை தவிர நடேச படையாச்சி நிறைய சொத்துக்கள் சம்பாதித்துள்ளார் என்றால் சரி . என் அப்பா தனியாக நிறைய சொத்துக்கள் வாங்கியுள்ளார் . நடேச படையாச்சி பாகம் மூலம் கிடைத்த தன்னுடைய தனி சொத்துக்களையும் தனியாக தான் சம்பாதித்த சொத்துக்களையும் ஒரு பதிவு உயில் மூலம் என் அப்பா நாகராஜ படையாச்சிக்கும், என் அத்தை தையல் நாயகிக்கும் கொடுத்திருக்கிறார் என்றால் சரி. அவ்வாறு உயில் மூலம் அவரவருக்கு கிடைத்த சொத்துக்கள் அவர்களுடைய தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் சரி. இது எதுவும் கூட்டுக்குடும்ப சொத்துக்கள் கிடையாது . நாகராஜ படையாச்சிக்கு உயில் மூலம் கிடைத்த சொத்துக்களை விற்பனை செய்ய உரிமை உள்ளது. அதை யாரும் கேட்க முடியாது.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.